# பணம்





சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து

# பணம், பெண், புகழ்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

# செய்தி: 56-01-01 ஏன் ஜனங்கள் மிகவும் அலைகழிக்கப்படுகிறார்கள்?

---

9. 1946-ம் ஆண்டு நான் கூடாரத்தை விட்டு வெளி ஊழியங்களுக்குச் சென்ற போது அங்கு பணத்தைக் குறித்ததான பெரிய தொந்தரவுகள் உண்டாகும் என்று நான் அறிந்தேன். ஏனெனில் இத்தகைய கூட்டங்களில் பணமானது அதிக அளவில் சம்பந்தப்பட்டிருந்தது. ஆகவே நான் கர்த்தரிடம், “இந்தக் கூட்டங்களில் என் முழு இருதயத்தோடும் உமக்கு ஊழியம் செய்வேன்” என்று வாக்களித்திருந்தேன். ஒரு மனிதனை கர்த்தர் சிறிதளவு ஆசீர்வதிக்கும் போது மூன்று முக்கியமான காரியங்களான பணம், பெண், புகழ் என்பவை அவனைத் திரும்பவும் அவனுடைய பழைய நிலைமைக்குக் கொண்டு வந்து விடுகின்றன என்பதை நான் கவனித்திருக்கிறேன். வேதத்தில் பாலாக் என்பவன் தீர்க்கதரிசியாகிய பிலேயாம் என்பவனுக்கு அதிகமான பணத்தைக் கொடுக்க முன்வந்த போது, அந்த

பணத்தின் காரணமாக பிலேயாம் தன்னுடைய வரத்தை விற்றுப் போட்டான் என்று பார்க்கி றோம் (இச்சம்பவம் உங்களுக்குத் தெரிந்த ஒன்றாகும்)

10. சிம்சோன், தெலிலாளிடம் தன்னை விற்றுப் போட்டான். இந்தப் பெண் அவனை தன் மடியிலிருத்தி, அவன் தன்னிடமுள்ள கர்த்த ரின் இரகசியத்தை வெளியிடும் வரை அவனை மயக்கினாள்.

11. சவுல் புகழுக்காக தேவ வரத்தை விற்றுப் போட்டான். அவன் ஒரு தீர்க்கதரிசியா யிருந்தான். (தீர்க்கதரிசிகளில் ஒருவனாக அவன் எண்ணப்பட்டான் என்று வேதம் கூறு கிறது). இன்னொருவரைக் காட்டிலும் தன்னை பெரியவனாக்க விரும்பி புகழுக்காக அவன் விழுந்து போனான்.

12. மனிதன் விழுந்து போகத்தக்கதான இந்த மூன்று முக்கியமான காரியங்களை நான் வேதத்திலிருந்து கண்டு, எல்லா நேரங்களிலும் இந்த மூன்று காரியங்களை நான் தவிர்க்கத்

தக்கதாக நம்முடைய பரலோகப் பிதாவை நோக்கி வேண்டுதல் செய்தேன்.

13. கூட்டங்களில் ஒரு போதும் பணத்திற்காக பிச்சையெடுக்க மாட்டேன் என்று தேவனிடம் நான் வாக்களித்தேன். அது மட்டுமல்ல, காணிக்கை தட்டை ஜனங்கள் மத்தியில் அனுப்பி (இத்தகைய காணிக்கையின் மூலம் பல ஆயிர டாலர்கள் கிடைக்கும் என்று நான் அறிந்திருந்தேன்) கூட்டங்களுக்குத் தேவையான பண உதவியை நான் பெற்றுக் கொள்ளும் அளவிற்கு அவர் என்னைக் கைவிடுவாரென்றால், நான் ஊழியத்தை விட்டு விட்டு என் வீட்டிற்குத் திரும்பி விடுவேன் என்றும் கர்த்தரோடு ஒரு உடன்படிக்கை செய்திருந்தேன்.

14. இந்தக் காரியத்தில், யாரையும் எந்த விதத்திலும் வற்புறுத்தாமல் என் பணத் தேவையை அவர் அற்புத விதமாக சந்தித்தார். ஜனங்கள் பணம் தரத்தக்கதாக சற்று அவர்களை நிர்பந்திக்க நான் அனுமதிக்காததினால் கூட்டத்திற்கு ஒழுங்குகள் செய்யும் மூன்று

அல்லது நான்கு நிர்வாகிகள் தங்கள் வேலையையும் இழந்து விட்டனர். இத்தகைய காரியத்தில் எனக்கு நம்பிக்கை கிடையாது.



# ஒரு ஏழை மனிதனாய் இருப்பதையே நான் மிகவும் விரும்புகிறேன்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: **சுயசரிதை, 53-1108A**

நான் எங்கள் முதலாவது அனுபவத்தை இங்கே நினைவுகூருகிறேன், நாங்கள் மிக, மிக ஏழைகளாய் இருந்தோம். ஆகையால் தான் இன்று நான், என்னுடைய தெரிந்து கொள்ளுதல் என்னவெனில்...

நான் – நான் இதை பயபக்தியோடு கூறு கிறேன். ஒரு ஏழை மனிதனாய் இருப் பதையே நான் மிகவும் விரும்புகிறேன்.

நான் ஒரு கோடீஸ்வரனாக இருக்க வேண்டுமென்று விரும்பியிருந்தால், அவ்வாறு இருந்திருக்க முடியும்.

FBI ஏஜண்டான ஒரு நபர் 15 இலட்சம் டாலர்கள் மதிப்புள்ள ஒரு காசோலையை, ஒரு வங்கி வரைவோலையை (bank draft) என்னிடம் கொண்டு வந்தார், நான் கலிபோர் னியாவிலுள்ள மிஷன் பெல் வைனரியில் (Mission Bell Winery) இருந்த போது, **நான்**

**அந்தக் காசோலையை பார்க்கவும் மறுத்து விட்டேன்.**

இரண்டு மார்பகங்களும் எடுக்கப்பட்டு செயின்ட் லூயிஸில் இருந்த ஒரு பெண் சுகமாக்கப்பட்டாள், அவள்...

புற்று நோய் அவள் உடல் முழுவதும் பரவியிருந்தது.

டாக்டர். தியோடர் பால்வியாஸ் என்ற மருத்துவர் இந்த நோயாளியின் நிமித்தமாக மனமாற்றமடைந்து கலிபோர்னியாவிலுள்ள ஒக்லாண்டில் இந்தப் பிற்பகலில் சுவிசேஷத் தைப் பிரசங்கித்துக் கொண்டிருக்கிறார்.

கர்த்தர் எப்படியாக அந்த ஸ்திரீயிடம் உரைத்து, மூன்று நாட்களில் அவள் வீதியி லிருக்கும் கடைகளுக்குச் சென்று பொருட் களை வாங்கிக் கொண்டிருப்பாள் என்று அவளிடம் கூறினார்.

அவள் சுயநினைவற்றவளாக இருப்பதாக அவளுடைய மகளிடம் கூறினார்.

மருத்துவர், "சங்கை பிரன்ஹாம் அவர்களே, அது பெரிய எண்ணம் தான், நீர் யாரோ ஒருவரிடம் இவ்விதமான தவறான ஒரு நம்பிக்கையை திடமாக உருவாக்குகிறீரே, அந்தப் பெண் அங்கே கிடந்து மரித்துக் கொண்டிருக்கிறாளே" என்று கூறினார்.

11. நான், "நான் இங்கே தங்குவதற்கான நல்ல வாய்ப்பு எனக்குள்ளது. அந்த ஸ்திரீ சுகமடைந்தவளாய் மூன்று நாட்களுக்குள் வீதியில் நடந்து போகவில்லை என்றால், நான் என்னுடைய முதுகில் கள்ளத் தீர்க்கதரிசி என்ற அடையாளத்தை வைத்து விடுகிறேன், நீர் அப்படியே என்னைப் பட்டணத்தைச் சுற்றிலும் உம்முடைய காரின் முன்பாக என்னை ஓட வையும். அப்போது அவள் சுகமடையவில்லை என்றால், நான் அவ்வாறு செய்கிறேன். அவள் சுகமடைந்து மூன்று நாட்களுக்குள் வீதியில் நடந்து போவாளானால், நான் உம்முடைய முதுகில் ஒன்றை வைத்து (ஒட்டிக் கொண்டு) போகட்டும்" என்றேன்.

அந்த மருத்துவர் மனந்திரும்பி, இன்று சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணிக் கொண்டிருக்கிறார்.

அவர் மேற்கு கடற்கரையிலுள்ள சிறந்த அறுவை சிகிச்சை நிபுணர்களில் ஒருவர், ஜனங்கள் அவரைக் கொண்டு அறுவை சிகிச்சை செய்யும்படிக்கு நியூயார்க்கிலிருந்து கூட விமானத்தில் பறந்து வருகிறார்கள்.

அவர்கள் ஒரு–ஒரு 15 இலட்சம் (டாலர்கள் - *மொழிபெயர்ப்பாளர்*) மதிப்புள்ள ஒரு வங்கி டிராப்ட்டை அனுப்பியிருந்தார்கள்; இரண்டு ஏஜெண்டுகள் அதைக் கொண்டு வந்தார்கள், நான் அந்நேரத்தில் இரண்டு அறைகளைக் கொண்ட ஒரு குடிசையில் தான் வாழ்ந்து வந்தேன். ஆனால் சந்தோஷத்தை உண்டாக்குவது பணமல்ல, அது...

சந்தோஷம் என்பது நீங்கள் எவ்வளவு உலகத்தின் பொருட்களை சொந்தமாக வைத்திருக்கிறீர்கள் என்பதைப் பொறுத்து அமைவதில்லை, ஆனால் உங்களுக்கு பங்கிட்டுக் கொடுக்கப்பட்டிருக்கும் ('lotted) பாகத்தில்

நீங்கள் எவ்வளவு மனநிறைவோடிருக்கிறீர்கள் என்பதைப் பொறுத்தது.

திருப்தி அளிக்கிற ஒரு காரியத்தைக் கொண்டு அப்படியே உங்களை நீங்களே திருப்திபடுத்திக் கொள்ளுங்கள், அந்த திருப்தி அளிக்கிற காரியம் இயேசு கிறிஸ்து மட்டுமே.



**இந்த உலகத்தில் நாம் எதையும் கொண்டு வரவில்லை. போகும்போது நாம் எதையும் கொண்டு போவதில்லை என்பதும் நிச்சயம்**



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: அற்புதங்களின் யேகோவா, 59-1126

இப்பொழுது, விற்கும்படியாக நாங்கள் எதையும் பெற்றிருக்கவில்லை. நல்லது, நான் அதை திரும்ப பெற்றுக்கொள்கிறேன்.

புத்தகங்கள், ஒலிநாடாக்கள், படங்கள், இன்னும் மற்றவைகளை பையன்கள் இக்கட்டிடத்திற்குப் பின்னால் வைத்திருக் கிறார்கள் என நினைக்கிறேன். மேலும் அவைகளை...

நான் அந்த புத்தகங்களை வாங்குகி றேன். சகோதரன் கார்டன் லின்ட்சே (Bro. Gordon Lindsay) அந்தப் புத்தகங்களை அச்சிடுகிறார்.

நான் அதை நாற்பது சென்டுகளுக்கு வாங்குகிறேன், அதைவிட குறைவான

விலைக்கே விற்க வேண்டியவனாயிருக் கிறேன்.

பின்னர் அதற்குண்டான தொகை யானது அவர்களுக்கு அனுப்பப்படும். நீங்கள் அவர்களுக்கு எந்த லாபத்தையும் ஈட்டித் தரவில்லை, நஷ்டத்தைக் கொடுக் கிறீர்கள். அது செய்தியாயிருக்கிறது. மேலும் அந்த படங்கள், அவர்கள் அதை அனுப்புவதற்கான செலவானது...

நாங்கள் எந்த லாபத்தையும் ஈட்ட விரும்பவில்லை.

இந்த உலகத்தில் நாம் எதையும் கொண்டு வரவில்லை. போகும்போது நாம் எதையும் கொண்டு போவதில்லை என்பதும் நிச்சயம்.

நாங்கள் செய்ய முயற்சிப்பதென்ன வெனில்... ஏதாவதொரு வழியில் உங்களுக்கு அது உதவியாயிருக்கும் என நான் நினைக்கவில்லை என்றால், அந்தப் புத்தகங்களையும் மற்ற காரியங்களையும்

அங்கே வைத்திருக்க மாட்டேன். புரிகிறதா?

நான் பையன்களிடம் கூறியிருக்கிறேன்... நான் புத்தக நிலையத்திற்கு சென்று, அங்கே சற்று நின்று கவனிக்கும் போது, சிறிது நேரத்தில் ஒரு வயதான தகப்பனார் வந்து, “அந்தப் புத்தகத்தின் விலை என்ன?” என்று கேட்கும்போது, “அது ஐம்பது சென்ட்டுகள்” என்று கூறப்படும் நிலையில், அவர், “என்னிடம் இவ்வளவு தான்...” என்று கூறுவாரானால், எப்படியாவது அவருக்கு அதைக் கொடுத்துவிடுங்கள். அவ்விதமே செய்யுங்கள். புரிகிறதா?

யாராவது அதை விலை கொடுத்து வாங்க முடியாவிட்டால், ஏழ்மையான நபர், அது போன்று இருக்கும் பட்சத்தில், அவர் அதை பெற்றுக்கொள்ளட்டும். அது சரியே.

எங்கேயாவது, ஏதாவது ஒரு வழியில் நமக்கு அது கிடைக்கும். மேலும், அது அவ்விதமே இருந்து வருகிறது, அது அவ்விதமே இருக்கும், நீங்கள் மாத்திரம் தேவனை முதலாவதாக வைப்பீர்களென் றால்; அதுவே எல்லாமாயிருக்கிறது. தேவனை முதலாவதாக வைக்கவேண்டும்.

---



உடனே அவன் உறைந்த மழை நிறமான குஷ்டரோகியாகி, அவன் சமுகத்தை விட்டுப் புறப்பட்டுப் போனான்



# 2 இராஜாக்கள் 5:1-27

1. சீரிய ராஜாவின் படைத்தலைவனாகிய நாகமான் என்பவன் தன் ஆண்டவனிடத்தில் பெரிய மனுஷனும் எண்ணிக்கையுள்ளவனுமாயிருந்தான்; அவனைக் கொண்டு கர்த்தர் சீரியாவுக்கு இரட்சிப்பைக் கட்டளையிட்டார்; மகா பராக்கிரமசாலியாகிய அவனோ குஷ்டரோகியாயிருந்தான்.



**2. சீரியாவிலிருந்து தண்டுகள் புறப்பட்டு, இஸ்ரவேல் தேசத்திலிருந்து ஒரு சிறு பெண்ணைச் சிறைபிட்டித்துக்கொண்டு வந்திருந்தார்கள்; அவள் நாகமானின் மனைவிக்குப் பணிவிடை செய்துகொண் டிருந்தாள்.**



**3.** அவள் தன் நாச்சியாரைப் பார்த்து: என் ஆண்டவன் சமாரியாவிலிருக்கிற தீர்க்கதரிசியினிடத்தில் போவாரானால் நலமாயிருக்கும்; அவர் இவருடைய குஷ்ட ரோகத்தை நீக்கிவிடுவார் என்றாள்.

**4.** அப்பொழுது அவன் போய், இஸ்ரவேல் தேசத்துப் பெண் இன்ன இன்ன பிரகாரமாய்ச் சொல்லுகிறாள் என்று தன் ஆண்டவனிடத்தில் அறிவித்தான்.

**5.** அப்பொழுது சீரியாவின் ராஜா: நல்லது போகலாம், இஸ்ரவேலின் ராஜாவுக்கு நிருபம் தருகிறேன் என்றான்; அப்படியே அவன் தன் கையிலே பத்துத் தாலந்து வெள்ளியையும், ஆறாயிரம் சேக்கல் நிறைபொன்னையும், பத்து மாற்றுவஸ்திரங்களையும் எடுத்துக் கொண்டுபோய்,



6. இஸ்ரவேலின் ராஜாவிடத்தில் அந்த நிருபத்தைக் கொடுத்தான். அதிலே: இந்த நிருபத்தை உம்மிடத்தில் என் ஊழியக் காரனாகிய நாகமான் கொண்டுவருவான்; நீர் அவன் குஷ்டரோகத்தை நீக்கி விட அவனை உம்மிடத்தில் அனுப்பியிருக்கிறேன் என்று எழுதியிருந்தது.

**7.** இஸ்ரவேலின் ராஜா அந்த நிருபத்தை வாசித்தபோது, அவன் தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு: ஒரு மனுஷனை அவன் குஷ்டரோகத்தினின்று நீக்கி விடவேண்டும் என்று, அவன் என்னிடத்தில் நிருபம் அனுப்புகிறதற்கு, கொல்லவும் உயிர்ப்பிக்க வும் நான் தேவனா? இவன் என்னை விரோதிக்க சமயம் தேடுகிறான் என்பதைச் சிந்தித்துப்பாருங்கள் என்றான்.

**8.** இஸ்ரவேலின் ராஜா தன் வஸ்திரங் களைக் கிழித்துக்கொண்ட செய்தியை தேவ னுடைய மனுஷனாகிய எலிசா கேட்டபோது, அவன்: நீர் உம்முடைய வஸ்திரங்களைக் கிழித்துக்கொள்வானேன்? அவன் என்னிடத் தில் வந்து, இஸ்ரவேலிலே தீர்க்கதரிசி உண்டென்பதை அறிந்துகொள்ளட்டும் என்று ராஜாவுக்குச் சொல்லியனுப்பினான்.

**9.** அப்படியே நாகமான் தன் குதிரைக ளோடும் தன் இரதத்தோடும் வந்து எலிசாவின் வாசற்படியிலே நின்றான்.

**10. அப்பொழுது எலிசா: அவனிடத்தில் ஆள் அனுப்பி, நீ போய், யோர்தானில் ஏழுதரம் ஸ்நானம்பண்ணு; அப்பொழுது உன் மாம்சம் மாறி, நீ சுத்தமாவாய் என்று சொல்லச்சொன்னான்.**



**11.** அதற்கு நாகமான் கடுங்கோபங் கொண்டு, புறப்பட்டுப்போய்: அவன் வெளியே வந்து நின்று, தன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைத் தொழுது, தன் கையினால் அந்த இடத்தைத் தடவி, இவ்விதமாய்க் குஷ்ட ரோகத்தை நீக்கிவிடுவான் என்று எனக்குள் நினைத்திருந்தேன்.

**12.** நான் ஸ்நானம்பண்ணிச் சுத்தமாகிற தற்கு இஸ்ரவேலின் தண்ணீர்கள் எல்லா வற்றைப்பார்க்கிலும் தமஸ்குவின் நதிகளா கிய ஆப்னாவும் பர்பாரும் நல்லதல்லவோ என்று சொல்லி, உக்கிரத்தோடே திரும்பிப் போனான்.

**13.** அவன் ஊழியக்காரர் சமீபத்தில் வந்து, அவனை நோக்கி: தகப்பனே, அந்தத் தீர்க்கதரிசி ஒரு பெரிய காரியத்தைச் செய்ய உமக்குச் சொல்லியிருந்தால் அதை நீர் செய்வீர் அல்லவா? ஸ்நானம் பண்ணும், அப்பொழுது சுத்தமாவீர் என்று அவர் உம்மோடே சொல்லும் போது, அதைச்

செய்யவேண்டியது எத்தனை அதிகம் என்று சொன்னார்கள்.



**14.** அப்பொழுது அவன் இறங்கி, தேவனுடைய மனுஷன் வார்த்தையின்படியே யோர்தானில் ஏழுதரம் முழுகினபோது, அவன் மாம்சம் ஒரு சிறுபிள்ளையின்

~ 10 ~

மாம்சத்தைப்போல மாறி, அவன் சுத்தமானான்.



**15.** அப்பொழுது அவன் தன் கூட்டத்தோடெல்லாம் தேவனுடைய மனுஷனிடத்துக்குத் திரும்பிவந்து, அவனுக்கு முன்பாக நின்று: இதோ, இஸ்ரவேலிலிருக்கிற தேவனைத் தவிர பூமியெங்கும் வேறே தேவன் இல்லை என்பதை அறிந்தேன்; இப்போதும் உமது அடியேன் கையில் ஒரு காணிக்கை வாங்கிக்கொள்ள வேண்டும் என்றான்.



**16.** அதற்கு அவன்: நான் வாங்குகிற தில்லை என்று கர்த்தருக்கு முன்பாக அவருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்றான்; வாங்கவேண்டும் என்று அவனை வருந்தினாலும் தட்டுதல் பண்ணிவிட்டான்.

**17.** அப்பொழுது நாகமான்: ஆனாலும் இரண்டு கோவேறு கழுதைகள் சுமக்கத் தக்க இரண்டு பொதி மண் உமது அடியேனுக்குக் கட்டளையிடவேண்டும்; உமது அடியேன் இனிக் கர்த்தருக்கே அல்லாமல், அந்நிய தேவர்களுக்குச் சர்வாங்க தகனத்தையும் பலியையும் செலுத்துவதில்லை.

**18.** ஒரு காரியத்தையே கர்த்தர் உமது அடியேனுக்கு மன்னிப்பாராக; என் ஆண்டவன் பணிந்துகொள்ள நிம்மோன் கோவிலுக்குள் பிரவேசிக்கும்போது, நான் அவருக்குக் கைலாகு கொடுத்து நிம்மோன் கோவிலிலே பணியவேண்டியதாகும்; இப்படி ரிம்மோன் கோவிலில் நான் பணிய வேண்டிய

இந்தக் காரியத்தைக் கர்த்தர் உமது அடியேனுக்கு மன்னிப்பாராக என்றான்.

**19.** அதற்கு அவன்: சமாதானத்தோடே போ என்றான்; இவன் புறப்பட்டுக் கொஞ்ச தூரம் போனபோது,

**20.** தேவனுடைய மனுஷனாகிய எலிசாவின் வேலைக்காரன் கேயாசி என்பவன், அந்தச் சீரியனாகிய நாகமான் கொண்டு வந்ததை என் ஆண்டவன் அவன் கையிலே வாங்காமல் அவனை விட்டுவிட்டார்; நான் அவன் பிறகே ஓடி, அவன் கையிலே ஏதாகிலும் வாங்குவேன் என்று கர்த்தருடைய ஜீவன்மேல் ஆணையிட்டு,

**21.** நாகமானைப் பின் தொடர்ந்தான்; அவன் தன் பிறகே ஓடிவருகிறதை நாகமான் கண்டபோது, அவனுக்கு எதிர்கொண்டு போக இரத்தத்திலிருந்து குதித்து: சுகசெய்தியா என்று கேட்டான்.



22. அதற்கு அவன்: சுகசெய்திதான்; தீர்க்கதரிசிகளின் புத்திரரில் இரண்டு வாலிபர் இப்பொழுதுதான் எப்பிராயீம் மலைத் தேசத்திலிருந்து என்னிடத்தில் வந்தார்கள்; அவர்களுக்கு ஒரு தாலந்து வெள்ளியையும், இரண்டு மாற்றுவஸ்திரங்களையும் தரவேண்டும் என்று கேட்க, என் எஜமான் என்னை அனுப்பினார் என்றான்.

**23.** அதற்கு நாகமான்: தயவுசெய்து, இரண்டு தாலந்தை வாங்கிக்கொள் என்று சொல்லி, அவனை வருந்தி, இரண்டு தாலந்து வெள்ளியை இரண்டு கைகளில் இரண்டு மாற்று வஸ்திரங்களோடே கட்டி, அவனுக்கு முன்பாகச் சுமந்து போக, தன் வேலைக்காரரான இரண்டு பேர்மேல் வைத்தான்.

**24.** அவன் மேட்டண்டைக்கு வந்தபோது, அவன் அதை அவர்கள் கையிலிருந்து வாங்கி, வீட்டிலே வைத்து, அந்த மனுஷரை அனுப்பிவிட்டான்; அவர்கள் போய் விட்டார்கள்.

**25.** பின்பு அவன் உள்ளே போய்த் தன் எஜமானுக்கு முன்பாக நின்றான்; கேயாசியே, எங்கேயிருந்து வந்தாய் என்று எலிசா அவனைக் கேட்டதற்கு, அவன்: உமது அடியான் எங்கும் போகவில்லை என்றான்.

**26. அப்பொழுது அவன் இவனைப் பார்த்து: அந்த மனுஷன் உனக்கு எதிர் கொண்டுவர தன் இரதத்திலிருந்து இறங்கித் திரும்புகிறபோது என் மனம் உன்னுடன்கூடச் செல்லவில்லையா? பணத்தை வாங்குகிற தற்கும், வஸ்திரங்களையும் ஒலிவத்தோப்பு களையும் திராட்சத்தோட்டங்களையும் ஆடுமாடுகளையும் வேலைக்காரரையும் வேலைக்காரிகளையும் வாங்குகிறதற்கும் இது காலமா?**



**27. ஆகையால் நாகமானின் குஷ்ட ரோகம் உன்னையும் உன் சந்ததியாரையும் என்றைக்கும் பிடித்திருக்கும் என்றான்; உடனே அவன் உறைந்த மழை நிறமான குஷ்டரோகியாகி, அவன் சமுகத்தை விட்டுப் புறப்பட்டுப் போனான்.**



## யூதாஸ் சீஷர்களின் குழாமில் காணப்பட்டான். அங்கே அவன் பொக்கிஷதாரியுமாயிருந்தான். பாருங்கள்? அவன் அவர்கள் கூடவேயிருந்தாலும், எப்பொழுதும் பணத்தின் மேல் கைபோடுகிறவனாயிருந்தான்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 63-11-24E மூவகை விசுவாசிகள்

194. இப்பொழுது கவனியுங்கள். இந்த பாவனை விசுவாசி கூடவேயிருந்து பக்தி யுள்ளவனைப் போன்று நடிக்கின்றான்.

ஆனால் அவன் இருதயத்தின் ஆழத்தில், நீ எப்படி கிரியை செய்கின்றாய் என்றும், அல்லது தவறு எதுவென்றும் கண்டுபிடிக்க முயற்சிக்கிறான்.

அத்தகைய மாய்மாலக்காரர்களால் இந்த தேசம் நிறைந்திருக்கவில்லையா? அது யூதாசின் ஆவியாயிருக்கிறது. அது சரியான வார்த்தை.

யூதாஸ் சீஷர்களின் குழாமில் காணப் பட்டான். அங்கே அவன் பொக்கிஷதாரியு மாயிருந்தான். பாருங்கள்? அவன் அவர் கள் கூடவேயிருந்தாலும், எப்பொழுதும்

பணத்தின் மேல் கைபோடுகிறவனா யிருந்தான்.

அவன் பண ஆசை பிடித்தவனாயிருந் தான் என்று சரியாகச் சொல்லலாம்.

அவன் விசுவாசியைப் போன்று நடித் தாலும், பாவனை விசுவாசியாயிருந்தான்.

195. ஆனால் ஒன்றை ஞாபகம் கொள்ளுங்கள். அவனால் இயேசுவை முட்டாளாக்க முடியவில்லை.

அந்த எழுபது சீஷர்கள் இயேசுவை விட்டுச் சென்ற பின்னர், விசுவாசிகளான சீஷர்கள் மட்டும் அவரோடு தரித்து நின்றனர்.

ஆனால் இயேசு பன்னிருவராகிய அவர்களிடம் திரும்பி, பன்னிருவராகிய உங்களை நான் தெரிந்துகொள்ள வில்லையா? உங்களுக்குள்ளும் ஒருவன் பிசாசா யிருக்கிறான் என்றார்'' (யோவா. 6:70), யூதாஸைக் குறித்து இயேசு ஆதிமுதலாய் அறிந்திருந்தார். ஏனெனில்

அவர் வார்த்தையாயிருந்து இருதயத்தின் இரகசியங்களை அறிந்தவராயிருந்தார்.

196. இது எவ்வளவு கடினமான காரியம்! ஒரு நிமிடம் ஆழமாய் சிந்தித்துப் பாருங்கள். “சகோதரனே'' என்று அழைத்து தம்முடன் கூட நடந்து கொண்டிருக்கிற ஒருவன் ஆதி முதலாய் ஏமாற்றுக்காரன் என்றும் முப்பது வெள்ளிக் காசுக்காக தம்மைக் காட்டிக் கொடுக்கப் போகிறான் என்று, அறிந்திருந்தும், அந்த உணர்வு களை தம் மடியில் சுமந்திருந்தாரே அது எவ்வளவு கடினமான காரியம் “சிநேகிதனே'' என்று இயேசு யூதாஸை அழைத்தார். தம்மை அவன் காட்டிக் கொடுக்கப் போகிறான் என்பதை அவர் முன்பே அறிந்திருந்தார்.





**நிர்ப்பந்தம் செய்வது, பணத்துக்காக பிச்சையெடுப்பது போன்ற செயல்களில் எனக்கு நம்பிக்கை கிடையாது. அது தவறு என்பதே என் கருத்து.**



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 59-12-19 பரிசுத்த ஆவியின் பேரில் கேள்விகளும் பதில்களும் COD #11

98. **சகோதரன் பிரான்ஹாமே, போதகர்கள் தங்கள் ஆராதனைகளில் பணத்துக்காக நீண்ட நேரம் நிர்ப்பந்தம் செய்து, கூட்டத்திலுள்ள இத்தனை பேர் இவ்வளவு பணம் கொடுப்பார்களென்று தேவன் அவர்களிடம் கூறினதாக கூறுவது முறையாகுமா? அது சரியா அல்லது தவறாவென்று அறிய விரும்புகின்றேன். அது என் அமைதியை பயங்கரமாக குலைத்துள்ளது.**

150. என் நண்பனே, இதைக் குறித்த என் கருத்தை நான் உங்களுக்குத் தெரிவிக்கப் போகின்றேன். அது தான் சரி என்பதல்ல. ஆனால் அது பயங்கரமான செயல் என்பதே என் கருத்து

151. இதை கூற விரும்புகிறேன். தேவன் என்னை சுவிசேஷ ஊழியத்துக்கு அனுப்பியுள்ளார். பணமில்லாமல் நான் அவதிப்பட்ட தருணம் எனக்கும் இருந்திருக்கிறது. என்னிடம் பணமே இருக்காது. அப்பொழுது நான், ''காணிக்கை தட்டை ஜனங்களிடம் அனுப்புங்கள்'' என்பேன்.

மேலாளர் என்னிடம் வந்து, 'பில்லி இன்றிரவு நமக்கு கூட்டத்துக்கான செலவை கொடுத்து தீர்க்க 5000 டாலர்கள் குறைவாயுள்ளது. அதை செலுத்த ஜெபர்ஸன்வில்லில் உம்மிடம் பணம் உள்ளதா?'' என்று கேட்பார்.

152. நான், ''பரவாயில்லை. தேவன் என்னை இங்கு அனுப்பினார். இல்லையென்றால் இங்கு நான் வந்திருக்க மாட்டேன். (பாருங்கள்?) காணிக்கை தட்டை ஜனங்களிடம் அனுப்புங்கள்'' என்பேன்.

ஆனால் கூட்டம் முடிவதற்கு முன்பே, ஒருவர் வந்து, ''உங்களுக்குத் தெரியுமா, இதன் செலவுக்காக 5000 டாலர்கள் கொடுக்க கர்த்தர் என் இருதயத்தை ஏவினார்'' என்பார். பாருங்கள், பாருங் கள்? முதலாவதாக, அந்த கூட்டத்தை நடத்துவதற்கு வழி நடத்தப்பட வேண்டும்.

153. நிர்ப்பந்தம் செய்வது, பணத்துக் காக பிச்சையெடுப்பது போன்ற செயல் களில் எனக்கு நம்பிக்கை கிடையாது. அது தவறு என்பதே என் கருத்து. ஆனால் சகோதரனே, நீங்கள் அதை செய்ய நினைத்தால், உங்கள் மனதை நான் புண்படுத்தாதிருப்பேனாக. பாருங்கள்? ஒருக்கால் அப்படி செய்யும் உரிமையை நீங்கள் தேவனிடமிருந்து பெற்றிருப்பீர் கள். நான் என்னைக் குறித்த மாத்திரமே கூறுகிறேன். எனக்கு அதில் நம்பிக்கை கிடையாது.

154. போதகர்கள் பயமுறுத்துவதை நான் கேட்டதுண்டு. அண்மையில் நான் ஒரு கூட்டத்துக்கு சென்றிருந்தேன்... இவர்கள் பெந்தெகொஸ்தேயினர் அல்ல, இது. வேறு சபைகள் (பாருங்கள்?) ஒரு பெரிய 'காம்ப்' கூட்டத்தில் இப்படி நடந்தது. கொடி, நீ அப்பொழுது என்னுடன் இருந்தாய், இன்னும் மற்றவர்களும் அங்கிருந்தனர். இதற்காக அவர்கள் முழு பிற்பகலையும் எடுத்துக் கொண்டனர். அது புகழ் வாய்ந்த ஸ்தாபனக் கூட்டம் - இரண்டு அல்லது மூன்று ஸ்தாபனங்கள் ஒன்று சேர்ந்து நடத்தின கூட்டம் (நமது பட்டினத்திலுள்ள நவீன சபைகளைப் போல் அவை வழக்கமான சபைகள்). அது ஒரு பெரிய கன்வென்ஷன் -அவர்கள் அந்த முழு பிற்பகலையும் இதற்காக உபயோகித்து, மேடையில் நின்று கொண்டு, இந்த கூட்டத்துக்காக ஜனங்கள் பணம் கொடுக்காமல் போனால், தேவன் அவர்களுடைய பயிர்களை அழித்து

போடுவார் என்றும், அவர்களுடைய பிள்ளைகளுக்கு இளம்பிள்ளை வாதம் வரும்படி செய்வார் என்றும் இப்படிப்பட்ட காரியங்களைக் கூறி அவர்களை பயமுறுத்தினர். நான், "தேவனுக்கும் அவரைப் பின்பற்றுவோருக்கும் இது தேவதூஷணம்" என்றேன். **தேவன் உங்களை அனுப்பினால், அவர் உங்களை கவனித்துக் கொள்வார்.** அவர் உங்களை அனுப்பாவிட்டால், ஸ்தாபனங்கள் உங்களை கவனித்துக் கொள்ளட்டும். ஆனால் நீங்கள்... தேவன் உங்களை அனுப்பினால், அவர் உங்களை கவனித்துக் கொள்வார்.



# அவள் அதை செய்யும்படியாக அனுமதித்தார், ஏன்? பெற்றுக் கொள்வதைக் காட்டிலும், கொடுப்பது மிகவும் ஆசீர்வாதமானது என்று அவர் அறிந்திருந்தார்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 65-10-31A வழி நடத்தும் தன்மை (என்னைப் பின்பற்றி வா)

7. அந்த, "அருமையான அன்பளிப்பிற்காக குட்டி பையன்களே உங்களுக்கு என்னுடைய நன்றி" அது அப்படித்தான். திருமதி பிரான்ஹாம், "ரெபெக்காள், ஜோசப், சாராள் மற்றும் நாங்கள் யாவரும் உங்களுக்கு எங்கள் மிகுந்த நன்றியை" தெரிவிக்கின்றோம். அதை சொல்வதென்றால் எளிதல்ல, "சின்னப் பிள்ளைகளுக்குள்ளே இவர்களுக்கு எப்படி சொல்லுவது, உங்களது சில்லறைகளை சேமித்து, எனக்கு அன்பளிப்பு கொடுத்தீர்கள்" என்பதை அறிந்தபடியினால் எப்படி சொல்வது, "எனக்கு அதை ஏற்றுக் கொள்ள விருப்பமில்லை நான் அதை எப்படி உணர்கிறேன் என்று உங்களுக்கு தெரியும்

அதை ஏற்றுக் கொள்ள எனக்கு விருப்பமில்லை".

8. இருந்தபோதிலும், "அதை நான் பார்த்த போது, அதற்குள்ளாக 10 டாலர் நோட்டு வைக்கப்பட்டிருந்தது" நான் அதை ஏற்றுக் கொள்ளலாமா என்று நினைத்தேன். நான் அதை எப்படி செய்ய முடியும் என்று எண்ணினேன், ஆனால் நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்று நான் விரும்பு கின்ற ஒரு சிறு கதை, என் நினைவுக்கு வருகின்றது.

9. ஒரு நாள் ஒரு விதவையான ஒரு ஸ்திரீ இருந்தாள். அவளுக்கு சில குழந்தைகள் இருந்தனர், ஒருக்கால் அந்த குழந்தைகளுடைய தகப்பனார் போய் விட்டு இருக்கலாம். அவளிடம் இரண்டு காசுகள் மட்டுமே இருந்தது, ஒரு நேரம்

அவள் தெருவழியே வந்தாள், அது தசமபாகப் பணமாய் இருந்தது.

10. நீங்கள் சேமித்து வைத்தது போன்ற சின்ன காசுகள், அவள் அதை தேவ னுடைய பொக்கிஷத்தில் போய் போட்டு விட்டாள். இயேசுவானவர் அங்கேயே நின்று கொண்டு, அவளைக் கவனித்துக் கொண்டு இருந்தார். நான் அங்கே நின்று கொண்டு இருந்திருப்பேனானால், நான் என்ன செய்திருப்பேன் என்று ஆச்சரியப் படுகிறேன், "ஒருகால் அவளண்டை ஓடிப்போய், சகோதரியே வேண்டாம், வேண்டாம் நீங்கள் அதை செய்ய வேண்டாம்" என்று சொல்லியிருப்பேன்.

11. பார்க்கப்போனால் உண்மை யாகவே அது எங்களுக்கு தேவை இல்லை, உன் பிள்ளைகளுக்காக, அது உனக்கே தேவையாய் இருக்கிறது என்று சொல்லி

யிருப்பேன். புரிகின்றதா. அதை செய்யும் படியாய் நான் அவளை அனுமதித் திருக்கவே மாட்டேன். ஆனால் இயேசுவானவரோ, அவள் அதை செய்யும்படி அனுமதித்தார். பாருங்கள்.

12. அவள் அதை செய்யும்படியாக அனுமதித்தார், ஏன்? பெற்றுக் கொள் வதைக் காட்டிலும், கொடுப்பது மிகவும் ஆசீர்வாதமானது என்று அவர் அறிந் திருந்தார். அவளுக்கு அவர் என்ன செய்யப்போகிறார் என்பதை அவர் அறிவார். பாருங்கள். ஆகவே சிறு பிள்ளைகளே, என் முழு இருதயத்தோடு நான் உங்களுக்கு நன்றி சொல்லுகிறேன். இந்த அருமையான ஐக்கியத்தின் நேரத் திற்காக, உங்கள் ஒவ்வொருவருக்கும் நன்றி கூற விரும்புகிறேன்.



# ஜனங்கள் கொடுக்க விரும்பும்போது அவர்களுக்கு அப்படி செய்ய நீங்கள் தருணம் அளிக்க வேண்டும்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 65-0217 கர்த்தருடைய சமூகத்தினின்று விலகி ஓடிப்போகும் ஒரு மனிதன்

5. எனவே நான் நினைக்கிறேன்... பார்க்வ்யூ அரங்கத்தில் எத்தனை பேர் உட்காரலாம்? ('நாலாயிரம்' என்று சகோ. நெவில் பதிலளிக்கின்றார் - ஆசி). நாலாயிரம். எனவே பாருங்கள், நமக்கு தாராளமான இடவசதி இருக்கும். அங்கு நெருக்கம் இருக்காது. 6.30 மணிக்கு வந்து விடுங்கள். அப்பொழுது எல்லோருமே குறித்த நேரத்துக்கு வந்து விடலாம். உங்கள் இருக்கை வசதியாயிருக்குமென்று உறுதியாய் நம்புகிறேன். அது இப்படி சற்று உயர்த்தப்பட்டுள்ளது. அங்கு குறிப்பெழு துவதற்காக வசதி செய்யப்பட்டுள்ளது. கர்த்தருக்கு சித்தமானால் அது... இன்றிரவு, இது புதன் இரவு ஜெப கூட்டமாயிருப்

பதால், நமக்கு... இந்த இடம் ஒருவாறு நிரம்பியுள்ளது. எனவே நாளை தொடங்க லாம் என்று நினைக்கிறேன். ஒருக்கால் இந்த இடம் நிரம்பி வழிந்தால், நாம் அங்கு செல்லலாம் என்னும் எண்ணத்துடன் அந்த இடத்தை வாடகைக்கு எடுத்தோம். நாளை இரவு அங்கு செல்வது நலமென்று எண்ணுகிறேன், இல்லையா சகோ. நெவில்? அது நல்ல கருத்தென்று எத்தனை பேர் நினைக்கின்றீர்கள்? அங்கு தாராள மாக இடவசதி இருக்கும். அதற்கான வாடகை ஏற்கனவே செலுத்தப்பட்டு விட்டது. சபையிலுள்ள சில சகோதரர்கள் அதை செலுத்திவிட்டார்கள். அதன் வாடகை ஓரிரவுக்கு ஐம்பது டாலர்கள் மாத்திரமே. அது மிக மலிவு. அத்தனை பேர் உட்காரக் கூடியதும் அழகான மேடையும் கொண்ட அப்படிப்பட்ட ஒரு புது கட்டிடம். எல்லாவிடங்களிலும் ஓரிரவுக்கு ஐம்பது டாலர்கள் வாடகைக்கு கிடைத்தால் மிக நலமாயிருக்கும்.

6. நாம் காணிக்கை எடுப்போம் என்று நினைக்கிறேன். அந்த மனிதர் மாத்திரம் வாடகை செலுத்துவதை நாம் விரும்ப வில்லை. அதை அவர்களுக்குத் திருப்பிக் கொடுத்துவிடலாம். நமது செலவுக்கான பணம் கிடைத்தவுடனே, காணிக்கை எடுப்பதை நாம் நிறுத்தி விடுவோம். இங்கு நமது மத்தியில் யாராகிலும் அந்நியர்கள் இருப்பார்களானால் அவர்களுக்கு இதைக் கூற விரும்புகிறேன். பணத்துக்காக நாங்கள் ஜனங்களை அணுகமாட்டோம், யாசிக்கமாட்டோம் என்னும் கொள்கையை நாங்கள் வைத்துள்ளோம். நாங்கள் காணிக்கை தட்டை சுற்றிலும் அனுப்புகி றோம்... அது மார்க்க சம்பந்தமான ஒரு செயல். அநேக முறை நான் காணிக்கை தட்டை அனுப்புவதேயில்லை. ஆனால் அது கிரியை செய்வதில்லை. ஏனெனில் கொடுத்தல் என்பது நமது மார்க்கத்தின் ஒரு பாகமாயுள்ளது. அது நமது கடமை களில் ஒன்று. அது ஒரு காசாயிருந்தாலும்

பரவாயில்லை. ஐசுவரியவான்கள் தங்கள் பொக்கிஷங்களிலிருந்து காணிக்கை போடும் இடத்தில், ஒரு விதவை சென்று காணிக்கை போட்டதை இயேசு கண்டார். ஒருக்கால் இந்த விதவையின் பக்கத்தில் பசியாயுள்ள அவளுடைய இரண்டு சிறு பிள்ளைகள் நடந்து சென்றிருக்கக் கூடும். அவள் தனக்கிருந்த எல்லாவற்றையும் கொடுத்துவிட்டாள். மூன்று காசுகள். இயேசு, ''யார் அதிகமாகப் போட்டது?'' என்று கேட்டார்.

7. ஒருக்கால் நான் அங்கிருந்தால், ''சகோதரியே, அப்படி செய்ய வேண்டாம். எங்களிடம் நிறைய பணம் உள்ளது'' என்று சொல்லியிருப்பேன். ஆனால் அவரோ அவளைத் தடுக்கவில்லை. பாருங்கள்? பாதையில் அவர் அவளுக்காக பெரிதான ஒன்றை வைத்திருந்தார். எனவே பாருங் கள், அவள் போக வேண்டிய மகிமையின் வீடு ஒன்று அவளுக்கிருந்தது, அவர் அவளைத் தடை செய்யவில்லை. அவள்

மூன்று காசுகள் போட அவர் அனுமதித் தார். ஏனெனில் அவள் அதைச் செய்ய விரும்பினாள். அவள் இரண்டு பிள்ளை களைக் கொண்ட விதவையாயும், ஜீவனத் துக்காக மூன்றே காசுகள் கொண்டவளாயும் இருந்த போதிலும், அவள் அதை செய்ய விரும்பினாள். எனவே பாருங்கள். ஜனங்கள் கொடுக்க விரும்பும்போது அவர்களுக்கு அப்படி செய்ய நீங்கள் தருணம் அளிக்க வேண்டும்.

8. ஆனால் ஜனங்கள் இங்கு நின்று கொண்டிருப்பதை நான் நினைத்துப் பார்க்கும்போது; ஜனங்கள், “ஐம்பது டாலர்கள் யார் கொடுப்பார்கள்? இருபது டாலர்கள் யார் கொடுப்பார்கள்?'' என்கின் றனர். அது உங்களுடைய அறிவுக்கு இழுக்கை விளைவிக்கும். ஒரு கூட்டம் நடத்துவதற்கு பணம் அவசியம் என்பதை ஜனங்கள் உணருவார்கள் என்று கருது கிறேன். நிர்வாகிகள் அவ்வாறு செய்ய நான் அனுமதிக்கவில்லை. நான், ''நீங்கள்

அப்படி செய்ய வேண்டுமென்றால் அப்பொழுது எனக்கு கூடாரத்துக்கு திரும்பிச் செல்ல வேண்டிய நேரம் வந்துவிட்டது. நாம் அதை செய்ய வேண்டாம்'' என்று அவர்களிடம் கூறினேன். இருப்பினும் இதை பரிபூரண மார்க்க சம்பந்தமான ஆராதனைய பார்க்க, நாங்கள் காணிக்கை தட்டை அனுப்ப வேண்டுமென்று கருதுகிறேன். எனவே ஒவ்வொரு இரவும் அவர்கள், “இப்பொழுது நாங்கள் காணிக்கை எடுக்கப் போகின்றோம்'' என்று அறிவித்து, ஒரு சிறு காணிக்கை தட்டை ஒருவரிட மிருந்து மற்றவருக்கு அனுப்புவார்கள். காணிக்கை தட்டை அனுப்புவதுடன் அது முடிவு பெறும்.

**எனவே, அப்பொழுதிலிருந்து – தேவனுடைய ராஜ்யத்திற்கென்று யாராவது எதையாவது கொடுக்க விரும்பினால் நான் அதைத் தடுக்க முயற்சிக்கக் கூடாது என்று என் இருதயத்தில் ஒரு வாக்குறுதி பண்ணிக்கொண்டேன்**



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: அற்புதங்களின் யேகோவா, 59-1126

மேலும் இப்பொழுது, நான் -- நான் வேலை செய்கிறேன்; என்னுடைய சபையிலிருந்து நான் சம்பளத்தைப் பெற்றுக் கொள்கிறேன். ஒரு வாரத்திற்கு நூறு டாலர் என்பதே நான் என் சபையிலிருந்துப் பெற்றுக்கொள்வதாகும். ஆனால், இந்தக் கூட்டங்கள் தாங்கப்பட வேண்டும். இந்த நேரங்களில் ஜனங்கள்... நீங்கள் குடும்பம் மற்றும் பிள்ளைகளைப் பெற்றிருப்பீர்கள். அநேகர் என்னிடம், "நீங்கள் இங்கிருந்து சென்றவுடன் எங்கள் சபைக்கு வருவீரா? இப்பொழுது உமக்கு குறைவான நேரமே இருக்கிறது" என்கிறார்கள். நான் என்னுடைய கூடாரத்திற்குத் திரும்பிச் செல்கிறேன், ஏனெனில், அவர்களுக்கு ஒரு சிறிய எழுப்புதல் உண்டாகும்

பொருட்டாக, அவர்களுக்கு பரிசுத்த ஆவியை எப்படி பெற்றுக்கொள்வது மற்றும் அது போன்ற காரியங்களை அவர்களுக்கு போதிக்கும்படியாக நான் செல்கிறேன். பாருங்கள், நாங்கள் அங்கே ஒரு பாப்டிஸ்ட் பின்னணியில் இருக்கிறோம், எனவே, அவர்களோடுகூட ஒரு உண்மையான காரியத்திற்குள் செல்ல விரும்புகிறோம்.

அது தான் காரணம், ஏனென்றால், நான் மற்றுமொரு கூட்டத்திற்கு வந்தால், தாய்மாரும் தகப்பன்மாரும் தங்கள் பணத்தை கூட்டத்தைத் தாங்கும்படி செலவிட நேரிடும். பின்னர், குழந்தைகள், சிறுவர்கள் கிறிஸ்துமஸ் சமயத்தில் ஒருவேளை அவர்கள் ஏதோவொன்றை இழக்க நேரிடும். அது என்னை மோசமான உணர்வு அடைய செய்யும். புரிகிறதா? எனவே, நான் கிறிஸ்துமஸ் காலம் முடிந்தபின் வருகிறேன். பின்னர் நாம் மீண்டுமாக கூட்டங்களைத் துவங்குவோம்.

எனவே, கிறிஸ்துமஸ் நேரம் முடியும் முன்பாக, ஒவ்வொன்றையும் அப்படியே விட்டுவிடவே விரும்புகிறேன்.

7. பொருளாதார நிலையை சமாளிக்க என்னால் இயலும் என கருதுகிறேன், எனவே, ஒரு காணிக்கைக்காக நீங்கள் எதையும் குறிப்பிட வேண்டிய அவசியம் கூட இருக்காது. எப்படியாயினும், நான் இதை குறிப்பிட்டாக வேண்டும், ஏனென்றால்... ஒரு முறை நான் அதை காசோலை வாயிலாக பெற்றேன், அதை ஒருவர் எனக்கு கொடுக்க இருந்தார். நான் நினைத்ததை விட அதிகமாக, அது கொடுக்கப்படத்தான் வேண்டும். ஆனால், நான் -- நான் அதை ஏற்றுக் கொள்ள வில்லை. எனவே, அந்த சகோதரன், "நல்லது, நான் என்ன செய்யப் போகிறேன் என்று சொல்கிறேன், நான் வெறுமனே அந்தக் காசோலையை எடுத்துக்கொள் வேன். நீங்கள் வந்து, கூட்டங்களுக்குச் செல்லும்போது, நாங்கள் காணிக்கை

எடுக்கவோ அல்லது வேறேதாவதையோ செய்ய மாட்டோம்" என்று கூறினார்.

அப்பொழுது நான், "அது அருமையானது, நான் அதை செய்வேன்" என்றேன். அதைச் செய்தேன். அது வெற்றி கரமானதொன்றாக இல்லை. பாருங்கள், கூட்டத்தில் ஜனங்கள் ஏதாவதொன்றை பெற்றிருக்க வேண்டும். இது, அவர்க ளுடைய ஆராதனைக் கூட்டம். பின்னர், அவர்கள் வீதியில் என்னை சந்தித்து என்னிடம், "இந்தக் கூட்டங்களைக் குறித்தென்ன? அதில் எங்களுடைய பங்களிப்பு ஒன்றுமே இல்லை; அவர்கள் ஒரு காணிக்கை கூட எடுக்கவில்லை" எனக் கூற நேரிடும்.

**எனவே, காணிக்கை என்பது ஆராதனை யின் ஒரு பாகம் ஆகும். அது சரியே.**

**அன்றொரு நாள், ஜெஃபர்சன்வில்லில்** (Jeffersonville) **உள்ள புதிய கூடாரத்திற் கென்று ஹாட்டி ரைட் அவர்கள்** (Hattie

Wright), **தான் நேர்ந்து கொண்ட இருபது டாலரை நான் திருப்பிக் கொடுக்கச் சென்ற போது, கர்த்தர், "அவளை அப்படியே விட்டுவிடு" என்று கூறினார்.**

அப்பொழுதிலிருந்து நான் அந்த காரியங்களைக் குறித்து நன்கு அறிந்திருக் கிறேன். ஏன் அவளை விட்டு விடும்படி சொன்னார் என்று பின்னர் சற்று நேரத்தில் கண்டு கொண்டேன்.

8. **எனவே, அப்பொழுதிலிருந்து – தேவனுடைய ராஜ்யத்திற்கென்று யாராவது எதையாவது கொடுக்க விரும்பினால் நான் அதைத் தடுக்க முயற்சிக்கக் கூடாது என்று என் இருதயத்தில் ஒரு வாக்குறுதி பண்ணிக் கொண்டேன்.**

நான் அநேகமுறை அவ்விதமாகச் செய்து, என்னால் கூடுமானவரை விரை வாக அதைப் புறந்தள்ளி இருக்கிறேன். அவ்விதம் செய்வதால் நான் ஜனங்களை கொள்ளையாடினதாக உணர்ந்தேன்,

ஏனென்றால், தேவன் அதற்கென்று ஒரு திட்டத்தை கொண்டிருந்தார்...

**எனக்கு கெஞ்சுவதில் நம்பிக்கை இல்லை. இல்லை ஐயா, கெஞ்சிக் கேட்பதில் எனக்கு நம்பிக்கை இல்லை...** ஆனால், ஜனங்களிடம் அவ்விதம் இருக்கட்டும் என்று சொல்வதுண்டு... மற்றக் காரியங் களை தேவன் பார்த்துக் கொள்வார். நீங்கள் அதை விசுவாசிக்கவில்லையா? நிச்சய மாகவே, அவர் அதைச் செய்கிறார். அவர் அதை ஜனங்களின் இருதயத்தின் மேல் வைக்கிறார். அநேக முறைகள், ஏதோ ஒன்றைச் செய்யும்படி தேவன் ஜனங்களின் இருதயத்தின் மேல் அதை வைக்கிறார் என்று சிந்தித்திருக்கிறேன். பின்னர், "வேண்டாம், நான் அதை எடுத்துக் கொள்ள மாட்டேன், அதை செய்ய வேண்டாம்" என்று அதற்கு முரண்பாடாகக் கூறி, திரும்பி விடுவேன். அந்த சிறிய விதவை, தனக்குண்டான எல்லாவற்றை யும், அந்த மூன்று காசுகளைப் போட்டதை

யும், ஐசுவரியமான மனிதன் ஆயிரக்கணக்கான பணங்களைப் (dollars) போட்டதையும் கவனித்துக் கொண்டிருந்த இயேசுவை சிந்தித்துப் பார்க்கிறேன். ஆனால், அவர் ஒருபோதும் அவளைத் தடுக்கவில்லை; அவள் அதைச் செய்யும்படி அவளை விட்டுவிட்டார், ஏனெனில், தான் அவளுக்கு என்ன செய்யப் போகிறோம் என்பதைக் குறித்து அவர் அறிந்திருந்தார்.



# நரகத்தில்...



நீங்கள் வெறுமனே பணத்தை இச்சிக்க முடியும், அப்பொழுது நீங்கள் ஒரு கோடீஸ்வரனைப் போன்று குற்றவாளியாய் இருக்கிறீர்கள். புரிகின்றதா? நரகத்தில் அங்கே கோடீஸ்வரர்கள் இருப்பது போன்று, அங்கே பிச்சைக்காரர்களும் இருப்பார்கள்.

Rev. William Branham

செய்தி: யாரிடத்தில் போவோம்?, பத்தி எண் 99

# பணம்





சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து